# INCENTIVE ஐ உயர்த்தி வழங்காத மத்திய அரசையும், இரயில்வே போர்டையும் SRES - NFIR வன்மையாக கண்டிக்கிறது

**NFIR - Rly. Bd., PNM Item No. 12/2017** மூலம் தொடர்ந்து வலியுறுத்தியதால் அமைக்கப்பட்ட இன்சென்டீவ் கமிட்டியிடம் 04.6.18, 04.7.18 மற்றும் **26.9.18** ஆகிய நாட்களில் நடத்தப்பட்ட கூட்டங்களில், **1999** பார்முலா மற்றும் **19.07.2005**ல் நிதி அமைச்சகத்தால் ஏற்றுக்கொண்டபடி 7வது ஊதியக்குழு சம்பளத்திற்கேற்ப **01.01.2016** முதல் Incentive Rateஐ **3 மடங்காக** உயர்த்தி வழங்க வேண்டும் என கடந்த **18** மாதங்களாக SRES - NFIR தொடர்ந்து வலியுறுத்தியதற்கு **1.8 மடங்கு** மட்டும் உயர்த்துவதாகவும், **5% அலவுடு டைம்** குறைப்பதாகவும் **05.02.2019** அன்று Rly. Bd., தெரிவித்துள்ள கருத்தை SRES - NFIR வன்மையாக கண்டித்துள்ளது.

இது குறித்து இன்சென்டீவ் கமிட்டியை உடனடியாக கூட்டி ஒர்க்ஷாப் மற்றும் புரொடெக்ஷன் பிரிவை சார்ந்த தொழிலாளர்களுக்கும், சூப்பர்வைஸர்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதியை கலைந்து சரியான முடிவு எடுக்கவேண்டும் என SRESன் தலைவரும், NFIRன் பொதுசெயலாளருமான Dr.M.இராகவைய்யாஜி **11.2.2019** அன்று கடிதம் மூலம் Rly. Bd.,யிடம் வலியுறுத்தியுள்ளார்.

Ref : 1. Rly. Bd., Lr. No. 2018/M(W)/814/59 dt. 05.02.2019
2. GS/NFIR Ref to Rly. Bd. Lr. No.I./II/Pt.I dt. 11.2.2019

**புதிய பென்ஷன் திட்டம் ரத்து செய்வது மற்றும்**

**உழைப்பிற்கேற்ற இன்சென்டீவ் தொகையை உயர்த்த மறுக்கும்**

**மத்திய அரசையும்,** Rly. Bd.,**யையும் கண்டித்து**

**மார்ச்** 13 & 28 **தேதிகளில் நாடு தழுவிய போராட்டம்**

**அனைவரும் அணி திரள்வோம்... உரிமைகளை வென்றெடுப்போம்...**

**SRES** அறிக்கை எண் **941** **12.02.19**

**P.S.சூரியபிரகாசம்**
**GS / SRES & JGS/NFIR**

**NFIR**